பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 02 வியாழக்கிழமை 17.12.2020 கதிர் 272

## வெள்ளவத்தையில் மற்றுமொரு பகுதி திடீரென முடக்கம்!

கொழும்பு மாவட்டத்தின் வெள்ளவத்தை பொலிஸ் பிரிவின் கீழுள்ள நஹிர் தோட்டம் பகுதி இன்றிலிருந்து மறு அறிவித்தல் வரும் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் கொரோனாத் தொற்று அதிகரித்துள்ள பின்னணியிலேயே 3

## எதிர்வரும் 2 வாரங்கள் மிக அவதானம் தேவை

### யாழில் வைத்து இராணுவத் தளபதி எச்சரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

கொரோனாத் தொற்றுப் பரவலால்எதிர்வரும்இரண்டு வாரங்கள்மிகவும்அவதான மாக இருக்க வேண்டும். இந்த இரண்டுவாரங்களும் மக்கள் சுகாதாரப் பிரிவின ருக்குபூரணஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

-இவ்வாறுகொரோனாத் தடுப்புக்கானதேசிய செயற் பாட்டு மையத்தின் 3



## யாழ். மாவட்டத்தில் கொரோனா நிலை: சுகாதார அமைச்சின் தகவலே உண்மை

### தொற்றைக் கட்டுப்படுத்த ஒத்துழைக்கும் தமிழ் மக்களுக்கு அரசு நன்றி தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

தமிழ் மக்கள் அதிகமாக வாழ்ந்து வரும் வடக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனா வின் முதலாவது அலை தாக்கம் ஆரம்பம் முதல் இதுவரை அனைத்துத் தகவல்க ளும் சுகாதார அமைச்சாலேயே வெளி யிடப்படுகின்றது. சுகாதார அமைச்சின் தகவல்களையே நாம் வெளியிடுகின் றோம். இதுதான் நடைமுறை. சுகாதார அமைச்சின் தகவல்கள் அனைத்தும் உண்மை.

-இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு 2

## சுன்னாகம் சந்தை வியாபாரிகளில் இருவருக்கு கொரோனாத் தொற்று

மருதனார்மடம் சந்தை கொத்தணியில் புதிதாக இன்று இருவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுன்னாகம் சந்தையில் வியாபார நடவடிக்கையில் ஈடு பட்டுவருபவர்களே இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ள னர் என் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். 2

## கொரோனாத் தொற்று அபாயத்தால்

# வடக்கில் சகல சந்தைகளும் மறு அறிவித்தல் வரை பூட்டு

### நடமாடும் விற்பனைக்கு அனுமதி

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

**கொரோனா வைரஸ் நோய்த் தொற்று நிலைமை யைக் கருத்தில்கொண்டு வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்துப்பொதுச்சந்தைகளையும்மறுஅறிவித்தல் வரை மூடுமாறு இன்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.**

**வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பா ளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனின் ஆலோ சனைக்கு அமைய, வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட் டுள்ளது.** 2



## மாகாண சபைத் தேர்தலில் தனியே களமிறங்க வேண்டும் தமிழ் முற்போக்குக் கூட்டணி!

### மலையக மக்கள் முன்னணியின் நிலைப்பாடு இதுவே என்கிறார் இராதாகிருஷ்ணன் எம்.பி.

மாகாண சபைத் தேர்த லில் தமிழ் முற்போக்குக் கூட் டணி தனித்துப் போட்டியிட வேண்டும்என்பதேபங்காளிக் கட்சியாக இருக்கும் மலையக மக்கள்முன்னணியின்நிலைப் பாடாகும்.

- இவ்வாறு தமிழ் முற் போக்குக்கூட்டணியின்பங்கா ளிக் கட்சியான 2

## இனவாதிகளின் கொக்கரிப்புக்கு அடிபணியாது மாகாண சபை முறையை மேலும் பலப்படுத்துக!

### அரசிடம் வேலுகுமார் எம்.பி. வலியுறுத்து



புதிய அரசமைப்பு ஊடாக மாகாண சபை முறைமை மேலும் பலப்படுத்தப் படவேண்டும். அதைவிடுத்து இனவாதி களின் கொக்கரிப்புகளுக்கு அடிபணிந்து மாகாண சபை முறைமையை பலவீ னப்படுத்தும் நடவடிக்கையில் அரசு இறங்கக்கூடாது.

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்ட ணியின் பங்காளிக் கட்சியான ஜனநா யக மக்கள் முன்னணியின் பிரதித் தலை வரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற 2

## கொரோனாவின் பிடியிலிருந்து இதுவரை 26,353 பேர் மீண்டனர்!

### 8, 224 பேர் தொடர்ந்து சிகிச்சையில்

இலங்கையில் இதுவரை 34 ஆயிரத்து 737 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான நிலையில் சிகிச்சை பெற்று வருபவர்களில் மேலும் 701 பேர் இன்று குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 2

## பண்டிகைக் காலத்தில் அனைவருக்கும் கடன்

### அரசு அதிரடி அறிவிப்பு

எதிர்வரும் நத்தார் மற்றும் புத்தாண்டு பண்டிகைக் காலங்களில் ஒவ்வொரு குடும்பத்துக்கும் அவர்களின் பல் வேறு தேவைகளைப் பூர்த்தி செய்ய சலுகை வட்டி விகிதத் தில் நிதி வசதிகளை வழங்க அரசு முடிவு செய்துள்ளது. 2

## குடாநாட்டில் போதைப்பொருளையும் வன்முறையையும் கட்டுப்படுத்த பொலிஸ் - இராணுவம் கூட்டு நடவடிக்கை

### உறுதியளித்தார் இராணுவத் தளபதி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போதைப்பொருள் மற்றும் வன் முறைச் சம்பவங்களை இராணு வத்தினர் கட்டுப்படுத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள் ளது. அதற்கிணங்க எதிர்காலத்தில் பொலிஸாருடன் இணைந்து இரா ணுவமும் யாழ்ப்பாணம் மாவட் டத்தில் போதைப்பொருள் மற்றும் வன்முறைச் சம்பவங்களைக் கட் டுப்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபடு வார்கள்.



- இவ்வாறு கொரோனாத் தடுப் புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் 2

## வட்டுக்கோட்டை உப்புவயல் குளம் மக்கள் பாவனைக்குக் கையளிப்பு

### யாழ் இராணுவத் தளபதியால் திறந்துவைப்பு





(எஸ்.நிதர்ஷன்)

புனரமைக்கப்பட்ட யாழ்ப்பாணம் - வட் டுக்கோட்டை தென்மேற்கு உப்புவயல் குளம் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வாவால் இன்று மக்கள் பாவ னைக்காகத் திறந்து வைக்கப்பட்டது.

யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியின் வழிகாட்டலில், தியாகி 2

## கொரோனாத் தொற்றுப் பெண்ணுக்கு ஒரே பிரசவத்தில் நான்கு குழந்தைகள்

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு ஒரே பிர சவத்தில் 4 குழந்தைகள் பிறந்துள் ளன.

கொழும்பு - 10, குப்பியாவத்தை யைச்சேர்ந்த 29 வயதுடைய பெண், பிரசவத்துக்காகச் சுமார் இரண்டு வாரங்களுக்கு முன்பு டி சொய்சா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். பி.சி.ஆர். பரிசோதனையில் குறித்த பெண்ணுக்குக் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டது என வைத்தியர் சாகரி கிரிவண்டேனியா தெரிவித்தார்.

இந்தநிலையில், அவர் இன்று காலை சிசேரியன் சத்திர சிகிச்சை மூலம் ஆண் குழந்தைகள் இருவர் மற்றும் பெண் குழந்தைகள் இருவ ரைப் பிரசவித்துள்ளார். 2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## இனவாதிகளின் கொக்கரிப்புக்கு அடிபணியாது ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினருமான எம்.வேலுகுமார் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் இன்று விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இந்த நாட்டில் வாழும் சிறுபான்மையின மக்கள் உண்பதற்காக மட்டுமே வாய் திறக்கவேண்டும், அவர்களுக்கு ஒருபோதும் உரிமைகள் வழங்கப்படக்கூடாது என்ற மமதையில் செயற்படும் பேரினவாத அரசியல்வாதிகள், அரசமைப்பு ரீதியாக வழங்கப்பட்டுள்ள உரிமைகளைக்கூட பறிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டு, அதற்கான சதித்திட்டங்களைத் தீட்டி வருகின்றனர். இதன் ஓர் அங்கமாகவே மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படக் கூடாது, அம்முறைமை நீக்கப்பட வேண்டும் என மீண்டும் கோஷம் எழுப்ப ஆரம்பித்துள்ளனர்.

புதியதொரு அரசமைப்பு இயற்றப்பட வுள்ள சூழ்நிலையில், மாகாண சபை முறைமைக்கு எதிராக அரசின் அனுசரணையுடன் இயங்கும் இனவாதிகள் போர்க்கொடி தூக்கியுள்ளமை பலத்த சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது.

குறிப்பாக தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வாக முன்வைக்கப்பட்ட மாகாண சபை முறைமையை புதிய அரசமைப்பின் ஊடாகப் பலவீனப்படுத்துவதற்கு அரசு முயற்சிக்கின்றதா என்ற அச்சமும் மேலோங்கியுள்ளது.

மத்தியிலிருந்து மாகாணங்களுக்கு மேலும் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும், மாகாண சபைகள் முறைமை மேலும் பலப்படுத்தப்படவேண்டும் எனத் தமிழ் பேசும் மக்கள் கோரிக்கை விடுத்து வரும் நிலையில், அவர்களின் உரிமைக் குரலை நசுக்குவதற்காக - ஒடுக்குவதற்காக அரசு, திட்டமிட்ட அடிப்படையில் இனவாதிகளைக் களமிறங்கியுள்ளதா என்ற வினாவும் எழுகின்றது.

அதேவேளை, தம்வசம் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் உள்ளது. பெரும்பான்மை இன மக்களை இயக்கக்கூடிய இனவாத சக்திகள் உள்ளன என்ற நம்பிக்கையில் அரசு, மாகாண சபை முறைமையில் கைவைக்கும் பட்சத்தில் அது பாதகமான எதிர்விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். இராஜதந்திர மட்டத்திலான நெருக்கடிகளையும் சந்திக்க வேண்டிவரும்.

எனவே, மாகாண சபை முறைமையில் கூடிய விரைவில் அரசு நடத்த வேண்டும். அதன்பின்னர் புதிய அரசமைப்பு ஊடாக மாகாண சபை முறைமையைப் பலப்படுத்த வேண்டும். - என்றுள்ளது.

## குடாநாட்டில் போதைப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இன்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழர்கள் அதிகம் வாழும் வடக்கு பிரதேசம் மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இராணுவத்தினரால் பல்வேறுபட்ட சமூக வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதாவது வருமானம் குறைந்தவர்களுக்கு 700 இற்கும் மேற்பட்ட வீடுகள் இராணுவத்தினரால் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இன்னும் மேலும் பல வீடுகள் அமைக்கப்படவுள்ளன. அதற்குரிய வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்படுகின்றன.

அத்துடன் வடபகுதியில் இராணுவத்தினரால் பல்வேறுபட்ட மனிதாபிமானச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. உதாரணமாக அண்மையில் யாழ். மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் புயல் அனர்த்தத்தின்போது இராணுவத்தினர் மனிதாபிமான உதவிகளைப் புரிந்திருக்கிறார்கள்.

தற்போது இராணுவமானது நல்லிணக்கம் மற்றும் இன ஒற்றுமையை ஏற்படுத்தும் முகமாகவே செயற்பட்டு வருகின்றது. எனவே, எமது இராணுவத்தினர் இந்த மனிதாபிமானச் செயற்பாடுகளை மக்களுக்குச் செயற்படுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் .

தற்போது இங்கே ஒருவர் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போதைப்பொருள் மற்றும் வன்முறைச் சம்பவங்களை இராணுவத்தினர் கட்டுப்படுத்த வேண்டும் என ஒரு கோரிக்கையை விடுத்திருந்தார்.

அதற்கிணங்க எதிர்காலத்தில் பொலிஸாருடன் இணைந்து இராணுவமும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போதைப்பொருள் மற்றும் வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபடுவார்கள்.

தற்போது யாழ். மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளது. இது அனைவரும் அறிந்த விடயமே. எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறாதவாறு இராணுவம் தனது பூரண ஒத்துழைப்பை வழங்கும். - என்றார்.

## கொரோனாத் தொற்று ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாயும் குழந்தைகளும் ஆரோக்கியமாக உள்ளனர் எனவும், அவர்கள் தனித் தனியாக வைக்கப்பட்டுள்ளனர் எனவும் கொழும்பு டி சொய்சா வைத்தியசாலை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

## வட்டுக்கோட்டை உப்பு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறக்கொடை நிறுவனத்தினரின் நிதிப் பங்களிப்பில், இராணுவத்தினரால் இந்தக் குளம் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

அது இன்று பொதுமக்களின் பாவனைக்காகக் கையளிக்கப்பட்டுள்ளது.

யாழ். நண்பர்கள் அமைப்பு, வட்டுக்கோட்டை தென்மேற்கு விவசாய சம்மேளனம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் அந்தக் குளத்தை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு இன்று காலை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் செனரத் பண்டார, யாழ். மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன், யாழ். இந்திய துணைத் தூதுவர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை தவிசாளர், வடக்கு மாகாண நீர்ப்பாசன பணிப்பாளர் மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

## வடக்கில் சகல சந்தைக ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்றுப் பரவலையடுத்து பொதுச்சந்தைகள் மற்றும் மக்கள் கூடும் இடங்களின் ஆபத்தைக் கருத்தில்கொண்டு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனைக்கு அமைய மாகாணத்தில் உள்ள அனைத்து சந்தைகளை மூடுமாறு உள்ளூராட்சி ஆணையாளர் அறிவுறுத்தியுள்ளார்.

அத்துடன், சந்தை வியாபாரிகள் மற்றும் விவசாயிகளுக்கு பயன்தரும் வகையில் வீதியோரம் அல்லது நடமாடும் விற்பனையை மேற்கொள்ள அனுமதிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் விடுத்துள்ள அறிவிப்பில்,

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வழங்கியுள்ள பரிந்துரைகளின் பிரகாரம் கொரோனா நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் வரும் வரை வடக்கு மாகாணத்தில் அனைத்துப் பொதுச் சந்தைகளையும் உடன் நடைமுறைக்கு வரும் வகையில் மறு அறிவித்தல் வரை மூடப்படவேண்டும்.

வாடிக்கையாளர்களின் தேவைகள் மற்றும் பாதுகாப்பைக் கருத்தில்கொண்டு வியாபாரத்தைப் பரவலாக்கி வீதியோரங்களில் அல்லது தமது வதிவிடங்களில் அல்லது நடமாடும் விற்பனையில் ஈடுபட அனுமதியளிக்கலாம்.

ஒரு குறிப்பிட்ட இடத்தில் பலர் வியாபாரம் செய்தலைத் தடை செய்யவேண்டும்.

வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள அபாயகரமான நிலைமையை விரைவில் கட்டுப்படுத்த இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது -என்றுள்ளது.

## பண்டிகைக் காலத்தில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இந்தக் கடன் வழங்கல் 03 பிரிவுகளின் கீழ் இடம்பெறும். மாதத்திற்கு ரூ. 50,000க்கு மேல் சம்பளம் அல்லது வருமானம் பெறுவோருக்கு ரூ. 50,000 கடனாகப் பெறலாம். மாதச் சம்பளம் அல்லது வருமானம் ரூ .25,000 க்கும் ரூ.50,000 க்கும் இடைப்பட்டவர்களுக்கு ரூ.25,000 கடன் வழங்கப்படும். மாதச் சம்பளம் அல்லது வருமானம் ரூ. 25,000 க்கும் குறைவாக இருந்தால், கடன் தொகை ரூ. 10,000 ஆகும். கடன்கள் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி மற்றும் சமுர்த்தி வங்கிகளின் ஊடாக வழங்கப்படுகின்றன.

துணை நிவாரண நிதி வசதிகள் பெற விரும்பும் அரச மற்றும் தனியார் துறைகளில் உள்ள ஊழியர்கள் தங்கள் நிறுவனத் தலைவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். நிறுவனத்தின் தலைவர் தனது ஊழியர்களின் சான்றளிக்கப்பட்ட பெயர்ப்பட்டியலை சேவை நிலையத்துக்கு அருகிலுள்ள அரச வங்கியில் சமர்ப்பிக்கும்போது, அந்தக் கிளையால் ஊழியர்களின் கணக்குகளுக்கு உடனடியாக அந்தத் தொகை வரவு வைக்கப்படும்.

கடன் தொகை 10 மாதங்களுக்குள் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். அறவிடப்படும் மாத வட்டி 0.625 வீதமாகும். கடன் தொகை 2021 ஜனவரி முதல் ஒக்டோபர் 31 வரையிலான காலப்பகுதியில் ஊழியரின் சம்பளத்திலிருந்து அறவிடப்படும்.

அரச ஓய்வூதியம் பெறுபவர்கள் மற்றும் சமுர்த்தி பெறுநர்களுக்கான கடன் வழங்கல் ஓய்வூதியத் திணைக்களம் மற்றும் சமுர்த்தி வங்கிக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஓட்டோக்கள், பாடசாலை வான் மற்றும் பஸ் உரிமையாளர்கள் மற்றும் தனியார் பஸ் ஊழியர்கள் தங்கள் வங்கிக் கணக்குகள் பேணப்படும் அரச வங்கிகளில் தங்கள் தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பதன் மூலம் சலுகைக் கடனுக்காக விண்ணப்பிக்கலாம். இந்தப் பிரிவுக்குள் வராத ஆனால் அரச வங்கிகளில் கணக்குகளை வைத்திருக்கும் நாளாந்த வேலைகளில் ஈடுபடுபவர்களுக்கும் தங்கள் வங்கிகளின் ஊடாக நிதி வசதிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

கொரோனா சவாலுக்கு மத்தியில் பின்னடைந்துள்ள பொருளாதாரம் மற்றும் மக்களின் இயல்பு வாழ்க்கையை முற்றிலுமாக மீட்டு, 2020இல் இழந்த முன்னேற்றத்துடன், 2021ஆம் ஆண்டில் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வது அரசின் நோக்கமாகும்.

தொற்றுநோய் காலப்பகுதியில் சுமார் இரண்டு மாத பயணக் கட்டுப்பாட்டு காலத்தில் ஏற்றுமதி, சுற்றுலா, நிர்மாணத்துறை மற்றும் ஏனைய உற்பத்தி மற்றும் சேவைகளை படிப்படியாக இயல்பு நிலைக்குக் கொண்டுவர உழைக்கும் மக்களும் வர்த்தக சமூகமும் பெரும் தியாகங்களைச் செய்தனர். இதற்கு சுகாதாரம், பாதுகாப்பு, பொலிஸ் மற்றும் அரச சேவைகளிடமிருந்து பெரும் ஆதரவு கிடைத்தது.

எனவே, 2020 ஆம் ஆண்டில் விவசாய உற்பத்தித் துறையில் ஒரு மறுமலர்ச்சிக்குள் பிரவேசிக்க முடிந்தது. நகர்ப்புற மக்களின் இயல்பு வாழ்க்கையை பேணுவதற்கான உணவுவிநியோகத்தை இது உறுதி செய்தது. அவ்வாறு பங்களித்த மக்களுக்கு வழங்கப்படும் ஊக்குவிப்பாக பண்டிகை காலங்களில் இதுபோன்ற நிதி வசதிகள் திட்டமிடப்பட்டுள்ளன -என்றுள்ளது.

## கொரோனாவின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி இலங்கையில் கொரோனாவின் பிடிக்குள் இருந்து மீண்டவர்களின் எண்ணிக்கை 26 ஆயிரத்து 353 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் 8 ஆயிரத்து 224 பேருக்குத் தொடர்ந்தும் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. கொரோனாவால் இதுவரை 160 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தனியே களமிறங்க ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாகாண சபைகளுக்கான தேர்தல் விரைவில் நடத்தப்படவேண்டும். அந்தத் தேர்தலில் தமிழ் முற்போக்குக் கூட்டணி தனித்துப் போட்டியிட வேண்டும் என்பதே பங்காளிக் கட்சியாக இருக்கும் மலையக மக்கள் முன்னணியின் நிலைப்பாடாகும். இது பற்றி கலந்துரையாடி முடிவு எடுக்கப்படும்.

மாகாண சபை முறைமை தொடர வேண்டும். அவ்வாறு இல்லாமல் அதனை இரத்துச் செய்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டால் அது பாரிய நெருக்கடி நிலைமையை உருவாக்கிவிடும் - என்றார்.

## சுன்னாகம் சந்தை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.பல்கலைக்கழக கொரோனா ஆய்வுகூடத்தில் இன்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் இருவரும் அடையாளம் காண்பட்டுள்ளனர் எனவும் 110 பேருக்கு குறித்த ஆய்வு கூடத்தில் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டன எனவும் அவர் தெரிவித்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தின் இன்றைய முடிவுகள் இன்னமும் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழ். மாவட்டத்தில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இன்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுகாதார நடைமுறைகளை வடபகுதி மக்கள் ஒழுக்கமாகவும் நேர்த்தியாகவும் கடைப்பிடிக்கின்றார்கள். அதன் காரணமாக முப்படையினர் மற்றும் பொலிஸார் சுகாதாரப் பகுதியினரால் வடபகுதியில் இலகுவாகக் கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த கூடியதாகவுள்ளது.

அத்தோடு தமிழ் மக்களுக்கு இந்தக் கொரோனா நோயைக் கட்டுப்படுத்துவதற்கு உதவியதற்காக நாட்டின் ஜனாதிபதி மற்றும் பிரதமர் சார்பில் நான் தமிழ் மக்களுக்கு மிக்க நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன் - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

வேலைக்கு ஆள் தேவை
பிரபல கம்பனி உற்பத்தி விற்பனையாள் தேவை. சம்பளம் நேரடியாக பேசி தீர்மானிக்கலாம்.
தொடர்புகளுக்கு
0769903620
0769903611

# யாழ்.மாநகரசபை மற்றும் நல்லூர் பிரதேச சபைக்கு ஆட்சி அமைப்பது தொடர்பில் கூட்டமைப்புடன் பேச்சு!

## மணிவண்ணன் தகவல்



யாழ்.மாநகரசபை, நல்லூர் பிரதேசபைகளில் சிறப்பான ஆட்சி ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகளில் தாம் ஈடுபடவுள்ளார் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முன்னாள் முக்கியஸ்தரும் யாழ்.மாநகரசபை உறுப்பினருமான வீ.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை சுப்பர்மடம் பகுதியில் காணப்பட்ட தடுப்பணை கடலால் அரிக்கப்பட்ட நிலையில் தற்காலிக தடுப்பணை அமைக்கும் நடவடிக்கையில் மணிவண்ணன் தலைமையிலான அவருடைய ஆதரவாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே மணிவண்ணன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நீங்கள் யாழ்.மாநகரசபை முதல்வராக பதவி ஏற்பதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன என்று தகவல்கள் வெளியாகிவருகின்றன, இந்தச் சம்பவம் உண்மையா என்று செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியோதே அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் உட்பட அனைத்து தரப்பினருடனும் பேசி காத்திரமான ஆட்சி ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகளை எடுப்போம். குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் கலந்து பேசி நல்லதொரு ஆட்சியை அமைப்பதற்கான முயற்சிகளிலே ஈடுபடப் போகிறோம் என அவர் தெரிவித்தார்.

## எதிர்வரும் 2 வாரங்கள் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இன்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாவின் தற்போதைய நிலவரம் தொடர்பில் ஜனாதிபதி நேற்று எம்முடன் கலந்துரையாடினார். அத்துடன் மாவட்ட அரச அதிபர் ஊடாக தற்போதைய நிலைமைகள் தொடர்பில் கண்காணித்து வருகின்றோம். எனினும், எதிர்வரும் இரண்டு வாரங்கள் மிகவும் அவதானம் தேவை.

எதிர்வரும் வாரங்கள் நத்தார் மற்றும் புதுவருடக் கொண்டாட்டங்கள் இடம்பெறும் வாரங்கள். எனினும், அந்தக் காலத்தில் நாட்டில் சில புதிய சுகாதார நடைமுறைகளை நாங்கள் செயற்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளோம். அது எவ்வாறான நடைமுறைகள் தொடர்பில் நாம் ஆராய்ந்து வருகின்றோம்.

மக்களைக் கொரோனாத் தொற்றிலிருந்து பாதுகாக்கும் முகமாக மக்களைப் பாதிக்காதவாறு சில சுகாதாரக் கட்டுப்பாடுகளை எடுக்கவுள்ளோம். அதற்காக அனைவரையும் தனிமைப்படுத்தமாட்டோம். ஆனால், கொரோனாத் தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் முகமாகவே சில நடைமுறைகளைச் செயற்படுத்தவுள்ளோம்

ஏனைய நாடுகளோடு ஒப்பிடும்போது இலங்கையைப் பொறுத்த வரைக்கும் கொரோனாவானது கட்டுப்பாட்டுக்குள்தான் இருக்கின்றது. எனினும், அதனைத் தொடர்ச்சியாகப் பேண வேண்டும். அதற்குப் பொதுமக்கள் உதவ வேண்டும்.

குறிப்பாகத் தனிமைப்படுத்தப்பட்டவர்கள் எக்காரணம் கொண்டும் வீடுகளை விட்டு வெளியில் செல்லக் கூடாது. அவ்வாறு சென்றால் ஏனையவர்களுக்கும் கொரோனா இலகுவாகப் பரவும். யாழ்ப்பாணத்தில் அவ்வாறு இடம்பெறவில்லை. ஆனால், கொழும்பின் சில இடங்களில் இவ்வாறு நடந்துள்ளது. எனவே, அவ்வாறானவற்றைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

எதிர்காலத்தில் நடமாடும் பி.சி.ஆர். பரி சோதனைகளை மேற்கொள்வதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

எதிர்காலத்தில் கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்காக எதிர்வரும் வாரமளவில் சில புதிய கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

வட்டுக்கோட்டையில் இராணுவத்தினரால் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட குளம் ஒன்றைத் திறப்பதற்காகவே இன்று யாழ்ப்பாணம் வந்திருக்கின்றேன்.

இந்தப் பிரதேச மக்களின் விவசாயத் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய இந்தக் குளத்தை இராணுவத்தினர் புனரமைத்துள்ளார்கள். அது இன்று மக்கள் பயன்பாட்டுக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் விவசாயத்துறையை விருத்திசெய்ய வேண்டும் என்ற எண்ணக் கருவுக்கு அமைவாக வடக்குப் பகுதியில் இராணுவத்தினரால் பல்வேறு விவசாய அபிவிருத்திச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதேபோல் வட்டுக்கோட்டைப் பிரதேசத்தில் 600 விவசாயிகள் பயன்பெறகூடிய இந்தக் குளமானது இன்று புனரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காகக் கையளிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இவ்வளவு காலமும் இந்த பகுதியில் உள்ள விவசாயிகள் எதிர்நோக்கி வந்த நீர்பிரச்சினைக்கு ஒருதீர்வு கிடைத்து விட்டது. எதிர்காலத்திலும் யாழ். மாவட்டத்தில் விவசாயத்துறையை விருத்தி செய்வதற்கு இராணுவத்தினர் தமது முழுப் பங்களிப்பை வழங்குவார்கள் - என்றார்.

## எதிர்வரும் 2 வாரங்க ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனக் கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

கடந்த சில நாட்களாக குறித்த பகுதியிலிருந்து அதிக தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் கூறினார்.

# பொன்னாலை வரதராஜர் ஆலய மார்கழி மகோற்சவம் ஆரம்பம்!

## குறைந்தளவான பக்தர்கள் பங்கேற்பு



பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த மார்கழி வைகுண்ட ஏகாதசி மகோற்சவம் இன்று வியாழக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. மிகக்குறைந்தளவான பக்தர்கள் உரிய சுகாதார விதிமுறைகளை பின்பற்றி இதில் கலந்துகொண்டனர்.

ஆலய வாயிலில் வைத்து பக்தர்களுக்கு தொற்றுநீக்கல் திரவம் வழங்கப் பட்டது. பக்தர்களின் பெயர்களும் பதிவு செய்யப்பட்டன. எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரதோற்சவமும் மறுநாள் திருவடிநிலையில் தீர்த்தோற்சவமும் ஞாயிற்றுக்கிழமை பூந்தண்டிகை உற்சவமும் நடைபெறும்.

50 பக்தர்களும் மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதிலும் ஒரே நேரத்தில் அனைவரும் ஒன்றுகூடுவதை தவிர்த்து நேர ஒழுங்கின் அடிப்படையில் ஆலயத்திற்கு சென்று இறைவனை வழிபடுமாறு சுகாதாரப் பிரிவு அறிவுறுத்தியுள்ளது.




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## பொருளாதார நெருக்கடியில் சிக்கித் திணறும் இலங்கை

கொரோனாத் தொற்றின் பாதிப்பை நாட்டின் நகரங்கள் ஏற்கனவே அனுபவிக்கத் தொடங்கி விட்டன.

வடக்கில் சகல பொதுச் சந்தைகளையும் இழுத்து மூடும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இனிமேல் வர்த்தகம் பாதிப்பு, உற்பத்திகளை சந்தைப்படுத்துவதில் நெருக்கடி என்று தொடங்கி கடைசியில் விவசாயிகள், உற்பத்தியாளர்கள் வரை சகலரும் பாதிக்கப்படும் நிலைமை தொடர் நிகழ்வாகக் கட்டவிழ்வது தவிர்க்க முடியாததாக இருக்கும்.

இதேசமயம், கொரோனாத் தொற்றினால் முழு இலங்கை நாடுமே எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி – பொருண்மிய வீழ்ச்சி – பற்றிய புள்ளி விவரங்கள் வெளியாகியுள்ளன.

நாடு மிகமிக மோசமான எதிர்காலத்தை எதிர்கொள்ளப் போகின்றது என்ற சிவப்பு எச்சரிக்கையை – ஆபத்து அலாரத்தை – அந்தப் புள்ளி விவரங்கள் வெளியிட்டுள்ளன.

இந்த வருடத்தின் இரண்டாவது காலாண்டில் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வீழ்ச்சி 16.3 வீதம் என்ற மோசமான நிலையை இலங்கைத் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தின் தகவல்கள் உறுதிப்படுத்தியிருக்கின்றன.

2019 இன் இரண்டாவது காலாண்டில் – அதாவது கடந்த வருடம் – கொரோனாத் தொற்று நெருக்கடி ஏற்பட முன்னர் – இருந்த 11 சதவீத வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடுகையில் இப்போதைய வீழ்ச்சி வீதம் ஏற்படுத்தவிருக்கும் மோசமான நிலைமை புரிந்து கொள்ளவும் உணர்ந்து கொள்ளவும் தக்கதே.

இலங்கையின் வரலாற்றில் மிகமிக மோசமான – மிகமிக நெருக்கடிகளை ஏற்படுத்தக் கூடிய – முன்னர் எப்போதுமே எதிர்கொண்டிராத – பாதிப்பான பொருளாதார வீழ்ச்சி இது. இதனால் ஏற்படப் போகும் நெருக்கடி, இக்கட்டு, சிக்கல் போன்றவை இலகுவில் சமாளிக்கக் கூடியனவாக இருக்கா என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

இந்த 2020 ஆம் வருடத்தின் இரண்டாம் காலாண்டில் மொத்த உற்பத்தி சுமார் ஒரு லட்சத்து 93 ஆயிரம் கோடி ரூபா.

இதுவே கடந்த வருடத்தின் 2019 ஆம் வருடத்தின் இரண்டாவது காலாண்டில் இரண்டு லட்சத்து 31 ஆயிரம் கோடி ரூபா.

அப்படிப் பார்த்தால் இந்த ஆண்டின் இரண்டாவது காலாண்டில் மட்டும் – மூன்று மாதங்களில் மட்டும் – சுமார் 38 ஆயிரம் கோடி ரூபா மொத்த உற்பத்தி வீழ்ச்சியை நாடு கண்டிருக்கின்றது.

தொலைத் தொடர்பு, தகவல் தொழில்நுட்பம், சில்லறை வர்த்தகம், உள்ளூர் விவசாயம் போன்றவற்றில் நாடு உருப்படியான சில முன்னேற்றங்களைக் காட்டினாலும், நாட்டின் மொத்த உற்பத்தி வளர்ச்சிக்கான உயர்ச்சியில் – எழுச்சியில் – தாக்கம் செலுத்துவதற்கு இத்துறைகளின் மேம்பாடு இலங்கையைப் பொறுத்தவரை போதுமானதல்ல.

அதையும் தாண்டி, சுற்றுலாத்துறை, ஆடை ஏற்றுமதித்துறை, தேயிலை ஏற்றுமதித்துறை ஆகிய மூன்றிலும் துரித வளர்ச்சியைக் காட்டுவதன் மூலம் மட்டுமே பொருளாதார வளர்ச்சியைத் தக்க வைத்து, வீழ்ச்சி ஆபத்திலிருந்து மீள முடியும் என பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இத்தகைய நெருக்கடி நிலைமையிலிருந்து – பொருளாதார இக்கட்டிலிருந்து – இலங்கை மீண்டெழுந்து மூச்சு விடுவதற்கு உலக நாடுகள் – குறிப்பாக ஐரோப்பிய நாடுகள் – ஒத்துழைக்க முடியும்.

ஆனால் அத்தகைய சமிக்ஞைகள் மேற்குலகிலிருந்து இலங்கைக்கு இதுவரைக் கிட்டாதமை நாம் செய்த துரதிஷ்டம் தான்.

அதற்கு மாறாக ஐரோப்பிய தரப்புகளிடமிருந்து நேர்மாறாக – தலைகீழான – சமிக்ஞைகளே இப்படி வருகின்றன என்பதை நாம் நிச்சயம் அவதானிக்க வேண்டும்.

அடுத்த வருடத்துக்கான வரவு – செலவுத் திட்டம் கடந்த மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட இருந்த வேளையில் – அதற்கு முதல்நாள் – ஐரோப்பிய ஒன்றியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

அதில் 'வர்த்தகம் என்பது ஒரு வழிப்பாதை அல்ல" என்று தெரிவிக்கப்பட்டது.

இலங்கையைப் பொறுத்தவரை அந்தக் கருத்து – குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியத்தின் நிலைப்பாடு – ஊன்றிக் கவனிக்கப்பட வேண்டியதாக இருக்கின்றது.

அதாவது, இலங்கை ஏற்றுமதி செய்யும் பொருள்கள் மூலம் இலாபமீட்டுவதுடன் அடங்கி விட முடியாது. ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிடமிருந்து இறக்குமதியும் செய்ய வேண்டும் என்பதே அக் கருத்து.

ஆடைத் தொழிற்சாலை, தேயிலை போன்ற ஏற்றுமதித் துறைகள் மூலமும் சுற்றுலாத்துறை மூலமும் இலங்கை ஈட்டும் அந்நிய செலாவணியை அது அதே ஐரோப்பிய ஒன்றியத்தின் பொருள்களை – அது வழங்கும் சேவைகளை – பெற்றுக் கொள்வதன் மூலம் மீண்டும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கே செலவிட வேண்டும் என்பதே அதன் எதிர்பார்ப்பு.

இப்படி ஈட்டும் செலாவணியை, அதை வழங்கும் தரப்பிடமே மீண்டும் செலவு செய்ய வேண்டுமானால், தனது பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கைக்கு மீட்சியே கிடைக்காது என்பது திண்ணம்.

## தமிழ் அரசியல் கைதிகளுக்கு என்ன நடந்தது அரசாங்கத்திடம் இராதாகிருஷ்ணன் கேள்வி!



'இலங்கையில் அரசியல் கைதிகளென எவரும் இல்லையெனில் இருந்த தமிழ் அரசியல் கைதிகளுக்கு என்ன நடந்தது' என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஷ்ணன் கேள்வி எழுப்பியுள்ளார்.

'இலங்கையில் அரசியல் கைதிகளென எவரும் இல்லை. அவ்வாறு இருந்தால் ஒருவரின் பெயரையாவது, அவ்வாறு கூறுபவர்கள் வெளியிடவேண்டும்' என உதயகம்மன்பில அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டின்போது கருத்து வெளியிட்டிருந்தார்.

இது தொடர்பில் நுவரெலியாவில் இன்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் ஊடகவியலாளர்கள் வினவியபோதே வே.இராதாகிருஷ்ணன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த ஊடக சந்திப்பில் இராதாகிருஷ்ணன் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

அமைச்சர் உதய கம்மன்பிலவின் கருத்தை ஏற்றுக்கொள்ளமுடியாது.

தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பான விவரங்களை பல தடவைகள் சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார். நாமும் அது பற்றிக் கதைத்துள்ளோம். நல்லாட்சியின்போது தமிழ் அரசியல் கைதிகள் உள்ளனர் என்பது உறுதிப்படுத்தப்பட்டது. அப்படியானால் இருந்த கைதிகளுக்கு என்ன நடந்தது? அவர்கள் இருக்கின்றனரா அல்லது இல்லாமல் செய்யப்பட்டுள்ளனரா என்ற சந்தேகம் எழுகின்றது.

அதேவேளை, மாகாணசபைகளுக்கான தேர்தல் விரைவில் நடத்தப்படவேண்டும். அந்தத் தேர்தலில் தமிழ் முற்போக்கு கூட்டணி தனித்து போட்டியிடவேண்டும் என்பதே பங்காளிக்கட்சியாக இருக்கும் மலையக மக்கள் முன்னணியின் நிலைப்பாடாகும். இது பற்றி கலந்துரையாடி முடிவு எடுக்கப்படும்.

மாகாணசபை முறைமை தொடரவேண்டும். அவ்வாறு இல்லாமல் அதனை இரத்து செய்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டால் அது பாரிய நெருக்கடி நிலைமையை உருவாக்கிவிடும்.- என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## எம்.சி.சி. கொடுப்பனவுகள் இரத்தாகினாலும் உதவிகள் தொடரும் என்கிறது அமெரிக்கா!

இலங்கைக்கான நிதியுதவியை நிறுத்துவது என எம்.சி.சியின் பணிப்பாளர் குழு தீர்மானித்துள்ள போதிலும் இலங்கைக்கு தொடர்ந்தும் உதவப்போவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

எம்.சி.சி. ஒப்பந்தத்திற்கு அமைய இலங்கைக்கு வழங்கப்படவிருந்த 48 கோடி அமெரிக்க டொலர் கொடுப்பனவை இரத்துச்செய்ய அமெரிக்கா தீர்மானித்துள்ளது.

அதன்படி இந்த ஒப்பந்தத்தின் கீழ் பயன்பெறும் நாடுகளின் பட்டியலில் இருந்து இலங்கை நீக்கப்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே இலங்கைக்கான அமெரிக்க தூதரகம் இதனைத் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா இலங்கையின் நட்பு நாடாக தொடர்ந்தும் காணப்படும் என தெரிவித்துள்ள தூதரகம், இலங்கை கொரோனாவை எதிர்கொள்வதற்கும் நாட்டை கட்டியெழுப்புவதற்கும் அமெரிக்கா தொடர்ந்தும் உதவும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

## தபாற்சேவை ஊடாகப் பொதிகள் விநியோகிக்க புதிய செயற்றிட்டம்

பொதிகள் மற்றும் பொருள்களை வீடுகளுக்கே விநியோகிக்கும் புதிய செயற்றிட்டமொன்று தபால் திணைக்களத்தால் முன்னெடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக பிரதி தபால்மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்துள்ளவை வருமாறு:-

பொருள்களைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் பணத்தைச் செலுத்தும் வகையில் இந்தச் சேவையை அறிமுகப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கணினி மயப்படுத்தப்பட்ட தபால் அலுவலகங்கள் ஊடாக இந்தச் சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதனூடாக சந்தைகளுக்குச் செல்வதைத் தவிர்த்து தமக்குத் தேவையான பொருள்களை மக்கள் வீடுகளிலிருந்தே பெற்றுக்கொள்ள கூடியதாக இருக்கும்.

குறித்த செயற்றிட்டத்தின் முதற்கட்டத்தில் 50 ஆயிரம் ரூபா வரையான பெறுதியுடைய பொருள்களை வீடுகளில் பெற்றுக்கொள்வதற்காக சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், ஆரம்பத்தில் பணக்கொடுக்கல் வாங்கல் மாத்திரமே முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் காலத்தில் கடன் அட்டைகளுக்கும் பொருள்களை விநியோகிக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்கப்படும்.- என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## 42 இலங்கையர் நாடு வந்தடைவு!

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த 42 இலங்கையர்கள் நாட்டை வந்தடைந்தனர்.

அதன்படி, கட்டாரிலிருந்து 42 பேர் இன்று (வியாழக்கிழமை) காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இவ்வாறு நாட்டை வந்தடைந்த அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அதன்பின்னர் அவர்கள் அனைவரும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டனர்.

## உயர் அதிகாரிகள் எவருக்கும் வவுனியாவில் தொற்று இல்லை!

வவுனியாவின் உயரதிகாரிகளுக்கு அவசரமான முறையில் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் முடிவு இன்று (வியாழக்கிழமை) வெளியாகியுள்ளது.

அதன்படி குறித்த அதிகாரிகள் எவருக்கும் தொற்று இல்லை என்று சுகாதார தரப்பினர் தெரிவித்தனர்.

வவுனியா நீதிமன்றில் பணியாற்றும் அரச சட்டவாதி ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டிருந்தது.

அந்த சட்டவாதி பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொண்டிருந்தார்.

இதனையடுத்து வவுனியா நீதிமன்றில் பணியாற்றும் ஊழியர்கள் மற்றும் மாவட்ட செயலகத்தின் உயர் அதிகாரிகளுக்கு பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் பரிசோதிக்கப்பட்டன.

அந்த முடிவுகள் இன்றையதினம் வெளியிடப்பட்டிருந்தன. அதன்படி அதிகாரிகளில் எவருக்கும் தொற்று இல்லை என உறுதிசெய்யப்பட்டது.

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு



# நிலவின் மண் மாதிரிகளுடன் மீண்டது சீனாவின் விண்கலம்



நிலவில் இருந்து பாறைத்துகள் மற்றும் மணல் மாதிரிகளை சேகரித்த சீன விண்கலம் பூமிக்குப் பத்திரமாகத் திரும்பியுள்ளது.

நிலவில் இருந்து பாறை துகள்கள், மண் உள்ளிட்ட மாதிரிகளை பூமிக்கு கொண்டு வந்து ஆய்வுகள் மேற்கொள்வதற்காக சீனா 'சேஞ்ச்5' என்ற ஆளில்லா விண்கலத்தை கடந்த மாதம் 24 ஆம் திகதி வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.

அந்த விண்கலம் இந்த மாதம் முதலாம் திகதி நிலவில் பத்திரமாகத் தரை இறங்கியது. அங்கு திட்டமிட்டபடி சுமார் இரண்டு கிலோ கற்கள், பாறைகள் போன்றவற்றைச் சேகரித்தது.

அதன்பின் கடந்த 3 ஆம் திகதி அந்த விண்கலம் நிலவு பரப்பில் இருந்து புறப்பட்டது. இது நிலவை சுற்றிக் கொண்டிருந்த ரொக்கெட் விண்கலத்துடன் கடந்த வாரம் வெற்றிகரமாக இணைக்கப்பட்டது.

அந்த விண்கலத்தில் இருந்த 4 என்ஜின்கள் 22 நிமிடங்கள் இயக்கப்பட்டன. இதையடுத்து நிலவில் எடுக்



கப்பட்ட பாறை, கற்களுடன் கடந்த 14ஆம் திகதி விண்கலம் பூமியை நோக்கி திருப்பப்பட்டது.

இந்நிலையில், பூமியை நோக்கி தனது பயணத்தை தொடங்கிய 'சேஞ்ச் – 5' விண்கலம் இன்று அதிகாலை 1.30 மணியளவில் சீனாவின் இன்னர் மங்கோலியா மாகாணம் சிசிவாங்க் மாவட்டத்தில் பச்சைப் புல்வெளியில் வெற்றிகரமாக தரையிறங்கியது.

இதையடுத்து, அந்த விண்கலத்தில் கொண்டுவரப்பட்ட நிலவின் பாறை, கல் துகள்களை சேகரித்த சீன விண்வெளி விஞ்ஞானிகள் அவற்றை ஆய்வு செய்யும் பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

ஏற்கனவெ அமெரிக்கா, ரயா ஆகிய நாடுகள் நிலவுக்கு விண்கலத்தை அனுப்பி அங்கிருந்து பாறைகள், மணல் போன்றவற்றை பூமிக்கு கொண்ட வந்து ஆய்வு செய்தன.

அதற்கு பின் 45 ஆண்டுகளுக்கு பிறகு நிலவில் இருந்து பாறை மற்றும் மணல் துகள்களை கொண்டுவந்த 3ஆவது நாடு என்ற பெருமையை சீனா பெற்றுள்ளது.

# இங்கிலாந்தில் பறந்தது உலகின் அதிவேகக் கார்

உலகின் வேகமாகச் செல்லும் கார் இங்கிலாந்தில் இயக்கிப் பார்க்கப்பட்டது.

அமெரிக்காவின் டெக்ஸாஸைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டுவரும் ஹென்னஸி நிறுவனம் புதிய அதிவேகக் காரினை தயாரித்துள்ளது.

இரண்டு மில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்புக் கொண்ட அந்தக் கார் 'ஹென்னஸி வெனம் ய்5' என்று பெயர் சூட்டப்பட்டது.

இங்கிலாந்துக்கு கொண்டு செல்லப்பட்ட 'வெனம் ய்5' மணிக்கு 500 கிலோ மீற்றர் வேகத்தில் இயக்கப்பட்டு உலகின் அதிவேகமான கார் என்ற பெருமையைப் பெற்றது.

ஏற்கனவே இந்தச் சாதனையைப் படைத்திருந்த புகாட்டி நிறுவனத்தின் சிரான் காரின் சாதனையை 'வெனம் ய்5' முறியடித்துள்ளது.



# ரயுகு குறுங்கோளில் இருந்து மண் மாதிரி பெற்றது ஜப்பான்



ரயுகு குறுங்கோளில் இருந்து ஹயாபூசா – 2 விண்கலம் சேகரித்து அனுப்பிய மண் தாங்கள் எதிர்பார்த்ததை விடவும் அதிகம் என்பதால், ஜப்பான் விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

பூமியில் இருந்து 30 கோடி கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள இந்தக் குறுங்கோளுக்கு 6 வருட பயணம் செய்த ஹயாபூசா – 2 விண்கலம், மண் மாதிரிகள் அடங்கிய சிறு பெட்டகத்தை பூமிக்கு அனுப்பியது.

ஆஸ்திரேலிய பாலைவனத்தில் இருந்து இந்த பெட்டகம் ஜப்பானின் விண்வெளி ஆராய்ச்சி நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு திறக்கப்பட்டது. அதிலுள்ள மண் காப்பிகொட்டையை அரைத்தது போல உள்ளது.

அதில் உள்ள கனிமங்களில் இருந்து வெளியாகும் வாயுவை யும் விஞ்ஞானிகள் ஆய்வு செய்ய உள்ளனர். இந்த மண் மாதிரியில் இருந்து கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு அண்டம் எப்படி இருந்தது? பூமியில் உயிர்கள் தோன்றுவதற்கும் அதற்கும் தொடர்பு உள்ளதா? – உள்ளிட்ட பல கேள்விகளுக்கு விடை கிடைக்குமா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

ஹயாபூசா 2 மற்றோர் குறுங்கோளை தேடி 11 ஆண்டு பயணத்தை தொடக்கி உள்ளது.

# பைடனை அங்கீகரித்தது டிரம்ப்பின் குடியரசுக் கட்சி

*அமெரிக்காவின் அதிபர் தேர்தலில் ஜோ பைடன் பெற்ற மகத்தான வெற்றியை அதிபர் டிரம்ப் ஏற்காமல் சட்ட ரீதி*



*யான நடவடிக்கைகளை எடுத்து வரும் நிலையில் டிரம்ப்பின் கட்சியான குடியரசுக் கட்சி ஜோ பைடனை அடுத்த அமெரிக்க அதிபராக ஏற்று அங்கீகரித்துள்ளது.*

*தேர்தல் முடிந்து ஒருமாதத்திற்கு மேலான நிலையில் தாமதமாக இந்த அங்கீகாரம் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக போட்டியிட்ட ஜோ பைடனுக்குக் கிடைத்துள்ளது.*

# நேபாளத் தலைநகர் காட்மாண்டுவில் பசுபதிநாதர் ஆலயம் மீண்டும் திறப்பு

நேபாளத்தின் தலைநகர் காட்மாண்டுவில் உள்ள பிரசித்தி பெற்ற இந்துக் கோவிலான பசுபதிநாத் ஆலயம் பல மாதங்களாக மூடப்பட்டிருந்த நிலையில், கொரோனா தளர்வு விதிகளின்படி திறக்கப்பட்டது.

கடந்த 9 மாதங்களாக மூடப்பட்டதற்காக இறைவனிடம் மன்னிப்புக் கேட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

இதனைத் தொடர்ந்து இன்று காலை முதல் பக்தர்கள் கோவிலுக்குள் அனுமதிக்கப்பட்டனர். கோவிலுக்குள் அனுமதிக்கப்பட்ட பக்தர்கள் மகிழ்ச்சியுடன்



சாமி தரிசனம் செய்தனர்.

காலை 6 மணி முதல் 12 மணி வரை கோவில் திறந்திருக்கும் என்று அறங்காவலர்கள் தெரிவித்தனர்.

# மனிதர்களுடன் உரையாடும் ஆற்றல் கங்காருவுக்கு இருப்பதாகத் தகவல்



புத்திக் கூர்மையுடைய ஆஸ்திரேலியாவின் விலங்கான கங்காருக்கு மனிதர்களுடன் உரையாடும் ஆற்றல் இருப்பதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நாய்களைப் போலவே அவை விழியசைவைப் புரிந்துக் கொள்வதாக கூறப்படுகிறது. காட்டு விலங்கான கங்காருவும் வீட்டுப் பிராணியைப் போல பார்வைகள் மூலம் மனிதர்களின் குறிப்புணர்வது ஆச்சரியமளிப்பதாக ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

பொதுவாக நாய்,பூனை, குதிரை, மாடு போன்ற வீட்டில் வளர்க்கப்படும் விலங்குகள்தாம் மனிதர்களுடன் உரை யாடும் ஆற்றல் பெற்றவை என்ற கற்பிதத்தை இந்த கண்டுபிடிப்பு தகர்த்து விட்டதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

# ஒரு வாரத்தில் 1.37 லட்சம் பேருக்கு பிரிட்டனில் கொரோனாத் தடுப்பூசி!

பிரிட்டனில் கடந்த ஒரு வாரத்தில் ஒரு லட்சத்து 37 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு கொரோனாத் தடுப்பூசி போடப்பட்டுள்ளதாக அமைச்சர் நதிம் ஜஹாவி தெரிவித்துள்ளார்.

பைஸர் மற்றும் பயோன்டெக் நிறுவனங்கள் தயாரித்த தடுப்பூசியின் முதல் டோஸ் போடும் பணி கடந்த 8 ஆம் திகதி தொடங்கிய நிலையில், இத்தனை நபர்களுக்கு செலுத்தப்பட்டிருப்பது சிறந்த தொடக்கம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெளிப்படைத்தன்மை முக்கியம் என்றும், பிரிட்டன் மக்கள் அனைவருக்கும் தடுப்பூசி போடப்படும் என்றும் அவர் உறுதி அளித்துள்ளார்.

கூடுதலாக மருத்துவமனைகள் பயன்படுத்தபடுவதால், இந்த எண்ணிக்கை இனி அதிகரிக்கும் என்றும் அமைச்சர் நதிம் ஜஹாவி குறிப்பிட்டுள்ளார்.

# பாகிஸ்தானில் பாலியல் குற்றவாளிகளுக்கு ஆண்மை நீக்கம் செய்யும் சட்டம் அமுலுக்கு

*பாகிஸ்தானில் பாலியல் வன்கொடுமை குற்றங்களில் ஈடுபடும் நபர்களுக்கு ரசாயன முறையில் ஆண்மை நீக்கம் செய்யும் அவசர சட்டத்துக்கு அந்நாட்டு அதிபர் ஒப்புதல் அளித்துள்ளார்.*

*பாகிஸ்தானில் பாலியல் வன்கொடுமை குற்றங்கள் அதிகரித்து வருவதால், குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுத்துள்ளது.*


*இதனையடுத்து பாலியல் வன்கொடுமைக் குற்றங்களைத் தடுக்கும் நோக்கில், குற்றவாளிகளுக்கு ஆண்மை நீக்கம் செய்யும் அவசர சட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது.*





சமூக நல அறிவிப்பு



# கொத்தணிகளாக  உருவாகும் கொரோனா!

**இலங்கையை ஆட்டிப்படைக்கும் கொரோனா – பேலியகொட, மருதனார்மடம் கொரோனா கொத்தணியை முறியடிப்போம்!**

கொரோனா வைரஸ் கொழுப்பு மற்றும் புரதத்தினால் மூடப்பட்ட ஓர் அமைப்பாகும்.



- பொதுவாக கொழுப்பு மற்றும் புரதங்கள், எண்ணெய், கிரீஸ், போன்ற உடலில் எளிதாக ஒட்டிக்கொள்ளக்கூடிய, தண்ணீரால் சுத்தம் செய்ய இயலாத மூலக்கூறுகள் சோப்பு கொண்டு நன்றாக கழுவும் போது சுத்தம் ஆவது அனைவரும் அறிந்ததே. இதேதான் இந்த கொரானா வைரஸுக்கும்.

- கொரானா வைரஸும் ஓர் உயிரற்ற மூலக்கூறு. இதன் முக்கிய உறுப்பு RNA - ஆகும். இந்த RNA உறுப்பு தான் நம் உடலில் உள்ள செல்களுடன் இணைந்து புரோட்டீன் உதவியோடு தன்னை தொண்டை மற்றும் நுரையீரலில் பெருக்கி இறுதியாக சிறுநீரகத்தைச் செயலிழக்க செய்து இறப்பை ஏற்படுத்தும். இதனை சுற்றியுள்ள கொழுப்பு மற்றும் புரதம்தான் இதனை பாதுகாக்கும் கவசம்.

- சவர்க்காரம் கொண்டு கைகளை கழுவும்போது (30 செக்கன்களுக்குக் குறையாமல்) இதனை பாதுகாக்கும். கொழுப்பு மற்றும் புரத மூலக்கூறுகளை சவர்க்காரத்தின் மூலக்கூறுகள் அழித்து சுத்தமாக ஓடும் தண்ணீரில் வெளியேற்றிவிடும். இதனால் வைரஸ் செயல் இழந்து அழிந்துவிடும்.

**சமூக அக்கறையுடன் - கொரோனா தொடர்பான விழிப்புணர்வுத் தகவல்களை உங்களுக்கு வழங்க இன்று அனுசரணை வழங்குகின்றனர்:-**

Since 1978

City Medical Care
சிற்றி மெடிக்கல் கெயார்




Retail Pharmaceutical & Grocery
Wholesale Pharmaceuticals
Orthopedic Wholesale & Retail
Mother & Baby Needs

558A Hospital Rd, Jaffna
0212 217 661
558 A ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு
.
07
.
07
.
1929



இறப்பு
.
17
.
12
.
2020

அமரர்

# கார்த்திகேசு நடராஜா

(ஓய்வுபெற்ற அதிபர், காரைநகர்,
K.K. நடராஜா மாஸ்டர்)

காரைநகர் தந்த கல்வியாளனே
கணிதத் துறையின் புலமையாளனே
சீரான கல்விப் புலத்தில் தடம் பதித்தோனே
சிறந்த நல் வைத்தியரையும் கல்வியாளர்களையும் தந்தவரே
பேராண்மையுடன் பிறந்த மண்ணுக்கு உழைத்தவரே
பிரிவறிந்து ஆறாத்துயருடன் அஞ்சலிக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஈழத்து சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானை பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் இழப்பால் துயருறுற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனு தாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

உரிமையாளரும், ஊழியர்களும்.
மணி ஐயப்பா நகைப் பூங்கா
கந்தசுவாமி கோவில் முன்பாக,
A9 வீதி, கிளிநொச்சி.

# பாக். எதிரான யுத்த வெற்றியின் பொன்விழா இந்தியாவில் கொண்டாட்டங்கள் ஆரம்பம்

## வெற்றி ஜோதியை ஏற்றி பிரதமர் மோடி ஆரம்பித்து வைப்பு






1971 ஆம் ஆண்டு இந்தியா – பாகிஸ்தான் போரின் வெற்றி கொண்டாட்டமாக பொன்விழா ஆண்டு வெற்றி ஜோதியை டெல்லி தேசிய போர் நினைவிடத்தில் பிரதமர் மோடி வெற்றி நினைவு தினமான டிசம்பர் 16 நேற்று விஜய் திவஸ் நாளில் ஏற்றிவைத்தார்.

1971 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இந்தியா – பாகிஸ்தான் இடையே நடந்த போரில், பாகிஸ்தான் இராணுவத்தை வீழ்த்தி, இந்தியஈராணுவம் வரலாற்று சிறப்பு மிக்க வெற்றியை பெற்றது. இது வங்கதேசம் என்ற தனிதேசம் உருவாக வழிவகுத்தது. இரண்டாம் உலகம் போருக்குப்பின், இராணுவ வீரர்கள் மிகப் பெரிய அளவில் சரணடைந்தது இந்தப் போரில்தான் நடந்தது.

இந்தியா – பாகிஸ்தான் போரின் 50 ஆவது பொன் விழா வெற்றி ஆண்டை, இந்தியா டிசம்பர் 16 ஆம்தேதி முதல் கொண்டாடுகிறது. இதை முன்னிட்டு, இந்தியா முழுவதும் பல நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

இதன் தொடக்க நிகழ்ச்சி, டெல்லியில் தேசிய போர் நினைவிடத்தில் நேற்று நடைபெற்றது. இதில் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொண்டார். அவரைப் பாது காப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் வரவேற்றார்.

தேசிய போர் நினைவிடத்தில், போரில் உயிர்நீத்த வீரர்களுக்கு பிரதமர், முப்படை தலைமை தளபதி, முப்படை தளபதிகள் மலர் வளையம் வைத்து அஞ் சலி செலுத்தினர். நினைவிடத்தில் உள்ள அணையா ஜோதியிலிருந்து, பொன்விழா வெற்றி ஜோதியை பிரதமர் மோடி ஏற்றி வைத்தார்.

மொத்தம் 4 வெற்றி ஜோதிகள் ஏற்றப்பட்டு, அவை 1971 போரில் பரம் வீர் சக்ரா, மகாவீர் சக்ரா விருதுகள் பெற்ற வீரர்களின் கிராமங்கள் உட்பட நாட்டின் பல பகுதிகளுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. விருது பெற்றவர்களின் கிராமங்களில் இருந்து மண் எடுத்து வரப்பட்டு, தேசிய போர் நினைவுச் சின்னத்துக்கு கொண்டுவரப்படுகின்றன. இந்த பொன்விழா வெற்றி ஆண்டை முன்னிட்டு, பல்வேறு நினைவு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. இந்த போரில் பங்குபெற்றவர்கள் பாராட்டப்படவுள்ளனர். இராணுவ இன்னிசை நிகழ்ச்சி, கருத்தரங்குகள், கண்காட்சிகள், திரைப்பட விழாக்கள் உட்பட பல நிகழ்ச்சிகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளன.

## வட மாநிலங்களை வதைக்கும் கடும் குளிர் மற்றும் பனிக்காற்று




வட இந்திய மாநிலங்களில் கடும் குளிருடன் பனிமழை பொழிகிறது.

ஜம்மு காஷ்மீரில் பெய்து வரும் பனிப்பொழிவால் பஞ்சாப், ஹரியானா உள்ளிட்ட மாநிலங்களில் கடும்குளிர் வாட்டுகிறது. டெல்லியில் கடும் குளி ருடன் பனிக்காற்று வீசியதால் மக்கள் கம்பளிக ளைப் போர்த்தியபடி தினசரி அலுவல்களை கவனித் தனர்.

மூடுபனியால் வாகனங்கள் எதிரே வருவோரை கவனிக்க முடியாமல் ஊர்ந்து சென்றன. வாகன ஓட்டுனர்கள் வாகனங்களில் முகப்பு விளக்குகளை எரியவிட்டபடி பயணத்தை மேற்கொள்கின்றனர்.

கல்யாணமாலை
வட சர்வதேச
திருமண சேவை

மணமகன் விவரம்
பிறந்த திகதி - 1992.10.28
மதம் - இந்து ஆசாரி
நட்சத்திரம் - அனுசம்
செவ் - 8இல்
பாவம் - 29 3/4
கல்வி - Software Engineer
தொழில் - Engineer
எதிர்பார்ப்பு - Engineer Or Doctor

மணமகள் விவரம்
பிறந்த திகதி - 1996.08.22
மதம் - குருகுலம் K+K
நட்சத்திரம் - சுவாதி
பாவம் - 26
சூ/ செவ் - ------
கல்வி - HNDA
தொழில் - --------
எதிர்பார்ப்பு - அரச உத்தியோகம்

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக் களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங் களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.
க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.
077 3434 415
077 8578 528

# குளிர்காலத்தில் எந்தவொரு சவாலையும் எதிர்கொள்ள இந்திய இராணுவம் தயார்!

## கிழக்கு பிராந்திய இராணுவத் தளபதி சூளுரைப்பு



கொல்கத்தா,டிசெ.17

குளிர்காலத்தில் எந்தவொரு சவாலையும் எதிர் கொள்ள இந்திய இராணுவம் தயாராக உள்ளது என கிழக்கு பிராந்திய இராணுவத் தளபதி சவுகான் சூளுரைத்தார்.

1971 ஆம் ஆண்டு பாகிஸ்தானுடன் நடந்த இந் திய போர் வெற்றி பொன்விழா கொண்டாட்டம், கொல் கத்தாவில் உள்ள வில்லியம் கோட்டையில் நேற்று நடந்தது. இந்த விழாவின் இடையே கிழக்கு பிராந் திய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் அனில் சவுகான் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது:-

லடாக் மோதல்களுக்கு பின்னர் கிழக்கு கட்டளை பகுதியில் எந்த விதமான ஊடுருவல்களோ, பெரிய அளவிலான மோதல்களோ இல்லை. கல்வான் பள்ளத்தாக்கு சம்பவத்துக்கு பிறகு இந்தியாவுக்கும், சீனாவுக்கும் இடையேயான உண்மையான கட் டுப்பாட்டு கோட்டில் மகிழ்ச்சியான நட்புறவும், பரஸ்பர நம்பிக்கையும் இல்லாமல் போய் விட்டது. மீண்டும் இதை கட்டமைக்கக் காலம் எடுக்கும்.

லடாக் நெருக்கடியின்போது, முன்எச்சரிக்கை நடவடிக்கையாக இந்திய இராணுவமும், சீன படை களும் துருப்புகளைக் குவித்தன. ஆனால் இப்போது கிழக்கு பிராந்தியத்தில் குளிர்காலத்தின் தொடக்கத்தை யொட்டி, துருப்புகள் விலக்கிக்கொள்ளப்படுவதை பார்க்க முடிகிறது. இருந்தாலும், குளிர்காலத்தில் எந்தவொரு சவாலையும் சந்திக்க இந்தியிராணுவம் தயாராக உள்ளது.

சிக்கிம் எல்லையிலும், அருணாச்சலப் பிரதேசத் தின் காமெங்கிலும் சாலைகள் மற்றும் தடங்கள் அமைக்கும் விரைவான உள்கட்டமைப்பு நடவடிக்கை களில் சீன இராணுவம் ஈடுபட்டது. நாமும் பரஸ்பர நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். வளர்ந்து வரும் சவால்களை எதிர்கொள்வதற்கு நாம் தயாராக இருக்கிறோம். அவர்கள் எல்லைப் பகுதிகளை அடுத்து மாதிரி கிராமங்களை உருவாக்க முயற்சித் தனர். அங்கு அவர்கள் திபெத்திய நாடோடி மக்களை குடியமர்த்த விரும்புகின்றனர்.

டோக்லாமை பொறுத்தமட்டில், பூட்டானுக்கும், சீனாவுக்கும் இடையே பிரச்சினை இருக்கிறது. இந்தி யா, பூட்டான், சீனா என 3 நாடுகளுக்கு இடையே யான முச்சந்திப்பை தீர்மானிக்க வேண்டிய நிலை வரும்போது, இந்தியாவின் ஈடுபாடு வரும். வடகிழக் கின் சில பகுதிகளில் கிளர்ச்சி தடுப்பு நிலைமை நிலையானது. நாம் அங்கிருந்து இராணுவம் குறைத் துக்கொள்ளப்படுவதை தற்போது காண முடியும். – இவ்வாறு அவர் கூறினார்.

# பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் மோடியுடன் டில்லியில் சந்திப்பு



புதுடெல்லி,டிசெ.17

பிரிட்டிஷ் வெளியுறவுத்துறை மந்திரி டொமினிக் ராப், புதுடில்லியி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி யைச் சந்தித்துப் பேசினார்.

பிரிட்டிஷ் வெளியுறவுத்துறை அமைச்சர் டொமினிக் ராப், 3 நாள் பயணமாக கடந்த திங்கள் கிழமை இந்தியாவுக்கு வந்தார். மத்திய வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கரை சந்தித்து பேசினார்.

இந்த நிலையில் நேற்று அவர் பிரதமர் மோடியை சந்தித்தார். கொரோனாவுக்கு பிந்தைய சூழ்நிலை யில் இந்தியா – இங்கிலாந்து ஒத்துழைப்பு குறித்து இருவரும் விவாதித்தனர்.

இத்தகவலை பிரதமர் மோடி தனது ‘டுவிட்டர்’ பக் கத்தில் தெரிவித்துள்ளார். அதில், இந்திய குடியரசு தின விழா சிறப்பு விருந்தினராக பங்கேற்க உள்ள இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜோன்சனைச் சந்தி க்க ஆர்வமாக இருக்கின்றார் என மோடி கூறியுள்ளார்.

## சஜித் கட்சியின் யாப்பு தயார்!

# வருடாந்தம் தலைவர் பதவியில் மாற்றம் என்கின்றார் திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி.



கொழும்பு, டிசெ.17

தலைவர் உட்பட கட்சி நிர்வாகிகளை வருடா வருடம் தெரிவுசெய்யும் விதத்திலான ஜனநாயக வியூகத்தின் அடிப்படையிலேயே ஐக்கிய மக்கள் சக்தியின் யாப்பு தயாரிக்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

எமது கட்சிக்கான யாப்பு இறுதிப் படுத்தப்பட்டுள்ளது. அடுத்தவாரம் நிறைவேற்றுக்குழு கூடி அதற்கான ஒப்புதலை வழங்கும். அதன்பின்னர் கட்சி யாப்பின் பிரகாரம் சில நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படும்.

முதலாவதாக செயற்குழுவின் ஊடாக சகல பதவிகளுக்குமான நிர்வாகிகளை கட்சி தலைவர் தெரிவுசெய்வார். இதற்கு முகாமைத்துவக்குழு, நிறைவேற்றுக் குழுவின் அனுமதியும் பெறப்படும்.

இரண்டாவதாகக் கட்சியை பலப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும். தேர்தல் தொகுதிகளில் முன்னெடுக்க வேண்டிய விடயங்கள், கீழ் மட்ட அரசியல் இயந்திரத்தை பலப்படுத்துவதற்காக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் திட்டங்கள் வகுக்கப்படும்.

அத்துடன் புத்திஜீவிகள் குழு, சட்டத்தரணிகள் குழு, தொழிற்சங்க பிரிவுகள் எனக் கிளை அமைப்புகள் கட்டியெழுப் படும். அதற்கான பூர்வாங்க பணிகள் இடம்பெற்றுள்ளன. நிறைவேற்றுக்குழுவின் அனுமதி கிடைத்தபின்னர் இறுதிப்படுத்தப்படும்.

2021ஆம் ஆண்டுக்காக அங்கத்தவர்களை இணைக்கும் நடவடிக்கையும் ஆரம்பமாகியுள்ளது. அதேபோல் அடுத்த வாரம் முதல் 'வெற்றிபெறுவோம்' எனும் தொனிப்பொருளின்கீழான வேலைத் திட்டமும் 6 மாவட்டங்களில் முன்னெடுக்கப்படும். 2021 ஜனவரி மாதத்துக்குள் இதற்கான பணிகளை நிறைவுசெய்வதற்கு எதிர்ப்பார்க்கின்றோம்.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் புதிய யாப்பில் தலைவர் உட்பட நிர்வாக உறுப்பினர்களின் பதவி காலம் ஒரு வருடமாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. வருடா, வருடம் நிறைவேற்றுக்குழு ஊடாக தலைவர் பதவி உட்பட நிர்வாக பதவிகளுக்கு உறுப்பிர்கள் தெரிவுசெய்யப்பட்டு, வருடாந்த சம்மேளனத்தில் அதற்கு அனுமதி பெறவேண்டும்.

இவ்வாறு ஜனநாயக வியூகத்தின் அடிப்படையிலேயே யாப்பு தயாரிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் நம்பிக்கையும் கட்டியெழுப்பட்டுள்ளது.

செயற்குழு இருந்தாலும் நிறைவேற்றுக்குழுவே பலம்பொருந்திய கட்டமைப்பாக கட்சியில் விளங்கும். - என்றார்.

## மூடநம்பிக்கை அமைச்சர்கள் தொடர்பில் மக்களுக்கு அவதானம் மிக முக்கியம்!

### சந்திரசேகர் எச்சரிக்கை



மூட நம்பிக்கையில் மூழ்கிப்போயுள்ள அமைச்சர்கள் தொடர்பாக மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இன்றுநாட்டில் இந்தகொரோனாவிற்கு பின்னால் நடைபெறுகின்ற விடயங்கள் தொடர்பாகத் தேடிப்பார்க்கும் போது, மிகவும் பயங்கரமான நிகழ்வுகள் நிகழ்ந்து கொண்டு இருகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆட்சிக்கு வருகின்ற போது காணிகளைத் தாரை வார்க்க மாட்டோம் எனத் தெரிவித்த ஜனாதிபதி, இன்று நாட்டை படிப்படியாகத் தாரை வார்க்கும் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

## லங்கா பிரீமியர் லீக் தொடரை வெற்றிகொண்ட ஜஃப்னா ஸ்டேலியன்ஸ் அணிக்கு பிரதமர் வாழ்த்து



இலங்கையில் முதல் முறையாக ஏற்பாடு செய்யப்பட்ட லங்கா பிரீமியர் லீக் கிரிக்கெட் தொடரில் வெற்றிக் கிண்ணத்தை கைப்பற்றிய ஜஃப்னா ஸ்டேலியன்ஸ் அணிக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று (புதன்கிழமை) இரவு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பானுக ராஜபக்ஷ தலைமையில் காலி கிளேடியேட்டர்ஸ் அணியுடன் சூரியவெவ மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்ற இறுதி போட்டியில், திசர பெரேரா தலைமையிலான ஜஃப்னா ஸ்டேலியன்ஸ் அணி 53 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

லங்கா பிரீமியர் லீக் போட்டித் தொடர் கடந்த 26 ஆம் திகதி ஆரம்பமாகியது. கொழும்பு கிங்ஸ், காலி கிளேடியேட்டர்ஸ், தம்புள்ளை வைகிங்ஸ், கண்டி டஸ்கர்ஸ் மற்றும் ஜஃப்னா ஸ்டேலியன்ஸ் ஆகிய அணிகள் தொடரில் போட்டியிட்டிருந்தன.

ஆரம்ப சுற்றில் 20 போட்டிகளையும் அரையிறுதி சுற்றில் இரண்டு போட்டிகளையும் கொண்டமைந்திருந்த இம்முறை போட்டித்தொடரில் கலந்து கொண்ட அனைத்து உள்நாட்டு மற்றும் சர்வதே கிரிக்கெட் வீரர்கள் மற்றும் கொவிட் - 19 நெருக்கடிக்கு மத்தியில் மிகவும் வெற்றிகரமாக போட்டிகளை ஏற்பாடு செய்த விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, அமைச்சின் அதிகாரிகள் மற்றும் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினர் ஆகியோருக்கும் பிரதமர் வாழ்த்துக் களை தெரிவித்தார்.

இந்த முறை லங்கா பிரீமியர் லீக் போட்டித் தொடரின் நாயகனாக ஜஃப்னா ஸ்டேலியன்ஸ் அணியின் வனிது ஹசரங்க தெரிவுசெய்யப்பட்டமையுடன், இறுதி போட்டியின் நாயகனாக ஜஃப்னா ஸ்டேலியன்ஸ் அணியின் சொயிப் மலிக் தெரிவானார்.

விளையாட்டுவீரர்களை ஊக்குவிக்கும் வகையில் இறுதிப் போட்டியை நேரில் கண்டுகளிப்பதற்காக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன், பிரதமரின் பாரியார் திருமதி.ஷிரந்தி ராஜபக்ஷ, விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, இராஜாங்க அமைச்சர் டீ.வீ.சானக மற்றும் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் ஷம்மி சில்வா உள்ளிட்ட இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

## நடுத்தரவருமானம் பெறுபவர்களுக்கு வீட்டுத் திட்ட விண்ணப்பம் கோரல்!

நகர் பகுதிகளில் வசிக்கும் வீடற்ற குடும்பங்களுக்கு வீடு வழங்குவதற்கான நடுத்தர வருமான வீட்டு வசதி திட்டத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

குறித்த விண்ணப்ப படிவங்களை யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்ட செயலகங்களிலும், யாழ்ப்பாணம், நல்லூர், வடமராட்சி வடக்கு, கரைச்சி, வவுனியா ஆகிய பிரதேச செயலகங்களிலும், உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகங்களிலும் பெற்றுக் கொள்ள முடியும்.

விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் நகர அபிவிருத்தி அதிகார சபை, வடமாகாண அலுவலகம், 134, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கோரப் பட்டுள்ளது.

## ஹெரோயின் வைத்திருந்த ஒருவர் யாழில் கைது!

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் ஹெரோயின் போதை பொருளுடன் ஒருவர் நேற்றைய தினம்(புதன்கிழமை) கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து 2 கிராம் 140 மில்லி கிராம் ஹெரோயின் கைப்பற்றபட்டுள்ளது.

அத்துடன், அந்த நபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்த வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!

நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள் யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.

விலை - 150/=





கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.12.2020 இல் வெளியிடப்பெற்றது.